# இயல் ஒன்று

# கந்தபுராணமும் கச்சியப்பரும்

## 1. 0 முகவுரை

மகாபுராணங்கள் பதினெட்டனுள் ஒன்று ஸ்காந்த புராணம். இது லட்சம் கிரந்தங்களைஉடையது. இது தத்புருஷ கற்பத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும், கந்த மூர்த்தியின் தோற்றம், சூராதிகள் ஒடுக்கம் முதலியவற்றை விரித்துக் கூறும். இதில் சங்கர சங்கிதையை, கச்சியப்ப சிவாச்சாரியார் தமிழில் மொழி பெயர்த்து " கந்த புராணம்" என வழங்கினார். கந்தபுராணத்தின் சில இலக்கியக் கூறுகளை ஆய்வதற்கு முன், புராணம் என்றால் என்ன ? இது பற்றி அறிஞர்களின் கருத்துகள் யாவை என்பன பற்றியும், கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்கள் பெருமை, அவரது காலம் ஆகியனபற்றியும் இவ்வியலில் ஆராயப்படுகிறது.

## 1. 1 புராணம் - இதன் தொன்மம்.

தொன்மை என்பதற்குப் பழைமை என்பது பொருள், தொன்மம் என்பது இலக்கியங்களுள் புராணம் என்பதைக் குறிப்பதாகும்.

" தொன்மை தானே சொல்லுங்காலை
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே " (1)

என்பது தொல்காப்பிய நூற்பா. ' தொன்மையாவது உரையொடு பொருந்திப் போந்த பழைமைத்தாகிய பொருண்மேல் வருவன. அவை இராமசரிதமும், பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின்

மேல் வரும் செய்யுள்' என்பர் இளம்பூரணர். இராமாயணம், பாரதம் போன்றவைகள் இதிகாசங்கள என்றும், காப்பியங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. அவற்றுள இடம்பெறும் பல செய்திகள், பல புராதன காலத்தைச் சார்ந்தவை, அவற்றைப் பழைமை (Myth) அல்லது தொன்மை என்று கூறலாம், பழைமையான பண்புகள் நிறைந்த நாட்டுப் பாடல்களின் வாய்மொழிக் கதைவடிவமே புராணம் ஆகும். சமுதாயத்தின் பல்வேறு நிலைகளையும், இயற்கையையும் மிகு கற்பனைப் படைப்பான கடவுள்கள், புராணத் தலைவர்கள், மாபெரும் நிகழ்ச்சிகள் போன்றவற்றைப் பொதுமைப் படுத்தி விளக்குவதற்கு முயன்ற தொல்பழங்காலக் கதைகளாகும். எல்லாப் பழங்கதைகளும் முற்றிலும் கற்பனையான இயற்கை சக்திகளைப் படைக்கின்றன.

தொன்மைச் சமுதாயமக்கள் உலகத்தைப் புரிந்து கொண்ட முறையில், பல்வேறு அம்சங்களைப் புராணங்களில் காண முடிகிறது. இயற்கையை மறந்த சக்திகளைப் பற்றிய கருத்துக்களைக் கொண்டிருப்பதால் புராணங்களில் சமயக்கருத்துகள் பல அடங்கியுள்ளன. அதே நேரத்தில் பழங்கதைகள் மனிதனின் ஒழுக்க விதிமுறைகளையும், யதார்த்த நிலை பற்றிய அவனுடைய அழகுணர்ச்சிகளையும் பிரதிபலிக்கச் செய்கின்றன. மார்க்ஸ் கூறுவது போல் புராணம் என்பது, சமுதாயத்தையும், சூழ்ந்துள்ள பௌதிக நிலைமைகளையும் தன்னுணர்வற்ற நிலையில் திரும்பப் படைக்கும் செயலாகும். இதன் அடிப்படையிலேயே கலைகளில் புராணப் படிமங்கள் வெவ்வேறு விளக்கங்களுடன் அடுத்தடுத்துப் பயன் படுத்தப்படுகின்றன.

## 1. 2 வடமொழிப்புராணங்கள்

வடமொழிப் புராணங்கள், வேதம், இதிகாசம் ஆகிய இரண்டனுக்கும் அடுத்தபடியாக வைத்துப் போற்றப் படுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கள் செய்த கற்பனையின் விளைவே இந்த பழங்கதைக் (Myth) கூறுகளாகும். செவிவழிச் செய்திகளாக வந்த கதைக் கூறுகள் சிறிது சிறிதாக ஒருங்கிணைந்து ஒரு கதையாக உருவெடுத்துப் புராணமாகிறது. இவ்வாறு உருவான கதைகள்தான் புராணம் (Mythology) எனப்படும் இலக்கிய வகையாகும். வடமொழியில் புராணம் என்ற சொல் உபநிடதங்களிலும், சாஸ்திரங்களிலும் காணப்படுகின்றது. மகாபாரதத்தில் புராணங்களின் பெயர்கள் கூறப்படுகின்றன. அதர்வண வேத காலத்திலேயே புராணநூல்கள் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. கி.மு. நான்காம் நூற்றாண்டில் கௌடில்யர் தமது அர்த்த சாஸ்திரத்தில் , அரசகுமாரர்கள் முக்கியமாகக் கற்கவேண்டிய நூல்களுள் புராணமும் ஒன்று என்று கூறுகிறார்.

வேதகாலத்திற்கு முன்பே புராணங்கள் பழைய கதைகளாக இருந்தன. புராணங்களில் ஆதிபுராணங்கள், புத்தர் காலத்திற்கு முன்னரும், ஏனைய புராணங்கள் புத்தர் காலத்திற்குப் பின்னரும் ஆக்கப்பட்டவை என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. இந்திய நாட்டுப் பண்டைய இலக்கியங்களை வேதநூல்கள் என்றும், இதிகாச புராணங்கள் என்றும் பிரிக்கலாம்.

## 1. 3 ' புராணம் ' - இதன் விளக்கம்

முழுமுதற் கடவுள் சிவமூர்த்தியினிடம் உபதேசங்களைக் கேட்ட நந்தி மகாதேவர், சனத்குமார முனிவருக்கு உபதேசிக்க, அவர் வியாசருக்கு உபதேசிக்க, வியாச பகவான் சூதருக்கு உபதேசித்தனர் இப்புராணங்கள் பதினெண் வகைப்படும். அவை சைவ, பவிஷ்யம், மார்க்கண்டம், இலங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், நாரதீயம், விஷ்ணு, பாகவதம், பிரமம், பதுமம், ஆக்னேயம், பிரம கைவர்த்தம் முதலியன. இவையன்றி உப புராணம் பதினெட்டு உள, அவை உசனம், கபிலம் , காளி, சனற்குமாரம், சாம்பவம், சிவதர்மம், சௌரம், துர்வாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பாராசரீயம், பார்க்கவம், ஆங்கிரம், மாரீசம், மானவம், வாசிட்டம், இலைங்கம், வாருணம் முதலியன. இப்புராணங்களுள் சைவம், பௌதிகம், மார்க்கண்டம், லிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் இவை சிவ புராணங்களாகும், காருடம், நார்தீயம், விண்டு, பாகவதம், விஷ்ணுபுராணங்கள். பிரமம், பதுமம் ஆகிய இரண்டும் பிரமபுராணங்கள். ஆக்னேயம், அக்னிபுராணம், பிரலமகைவர்த்தம், சூரிய புராணம் சைவ முதலிய பத்துப்புராணங்களும், இரண்டு லட்சத்து அறுபத்தொண்ணாயிரம் கிரந்தங்கள் உடையன, காருட முதலிய விஷ்ணுபுராணங்கள் நான்கும் ஐம்பத்தையாயிரம் கிரந்தங்கள் உடையன. பிரமம் முதலிய இரண்டும் அறுபத்தையாயிரம் கிரந்தங்கள் உடையன. ஆக்னேயம் எண்ணாயிரம் கிரந்தம் உடையது. பிரமகைவர்த்தம் பன்னீராயிரம் கிரந்தம் உடையது இப்புராணங்கள் கிருதயுகத்துப் பிரம்ம தேவரால் பிரமமென ஒன்றாகி நூறுகோடி கிரந்தங்களாகவும், திரேதாயுகத்து இருடிகளால் கோடி கிரந்தங்களடங்கிய நூற்றுப்பதினெட்டு

சம்கிதைகள் அடங்கிய பதினெட்டு வகையினவாகவும், துவாபரயுகத்து வியாசபகவானால் நான்கு லட்சத்து எண்ணாயிரம் கிரந்தங்கள் அடங்கிய பதினெண் புராணங்களாகவும் ஆயின. இப்புராணங்கள் வியாசர் வழியாக ரோமகர்ஷணருக்கும், ரோமகர்ஷணர் சுமதி, அக்னிவர்ச்சன் முதலியோருக்கும் கூற வெளிவந்தன. [2]

## 1. 4 தமிழில் புராணங்கள்

வடமொழியில் மிகப் பழங்காலத்திலேயே செல்வாக்குப் பெற்று எழுத்து வடிவம் பெற்று விட்ட புராணம், தமிழ் மொழியில் 15, 16-ஆம் நூற்றாண்டுகளில்தான் அதுவும் மொழிபெயர்ப்பாகத் தோன்று கின்றது. 1564-இல் முடிசூடிய அதிவீர ராம பாண்டியன், கூர்மபுராணம், கலிங்க புராணம், கந்தபுராணத்தில் ஒரு பகுதியாகிய காசிக்காண்டம் முதலியவற்றை மொழிபெயர்த்தார், இதை அடுத்து தமிழில் எழுந்த புராணங்கள் ஏராளம். தமிழ் மொழியில் நூற்றுக்கணக்கான புராணங்கள் இருப்பினும், புராணம் என்றவுடன் நினைவுக்கு வருவன கந்தபுராணம், திருவிளையாடல்புராணம், பெரிய புராணம் போன்ற சிலவே. தமிழில வழங்கும் கந்த புராணம், திருவிளையாடல் புராணங்கள் ஆகியன வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப் பெற்றவை.

வேதங்கள் தோன்றுவதற்கு வெகு காலங்களுக்கு முன்னரே, ஆரிய திராவிடர் கலப்பு ஏற்பட்டு விட்டது. ஆகவே ஆரியர்களின் பழங்கதைகளும் திராவிடர்களின் பழங்கதைகளும் இரண்டறக் கலந்து, இந்தியப் பழங்கதைகளாக வளர்ந்தன. பி. இ. பரிஜிட்டர் என்பவர் கூறுவதுபோல் இந்திய மண்ணில் வழங்கி

வந்த நாட்டுக் கதைகளான பழங்கதைகளை, ஒன்று திரட்டி எழுதியதில் முன்னோடியாவர் வடமொழிவாணர்கள் எனலாம், அந்த முயற்சி வடமொழி வாணர்களால் முதற்கண் மேற்கொள்ளப்பட்டது எனச சிலர் கருதுவர், ஆனால் டாக்டர் விலியோசா அவர்கள், ஹாலாசிய மகாத்மியம் எனப்படும் வடமொழித் திருவிளையாடல் புராணமும், வடமொழிக் கந்தபுராணமும் சமஸ்கிருதம் கற்ற தென்னாட்டுப் புலவர்களால் எழுதப்பெற்றவைதாம் என்பதில் ஐயமில்லை. என்று கூறுகின்றார்.

## 1. 5 கந்தபுராணம்

வேத சிவாகமங்களின் பிழிவாய் வடமொழியில் நின்றியங்கும் நூல் ஸ்காந்தம் எனப்படும் அதனுள் ஒரு பிரிவு சங்கர சம்கிதை. அதில் முதன்மையான பகுதி சிவரகசிய காண்டம். அது உற்பத்திகாண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்க காண்டம், உபதேசகாண்டம் என ஏழு காண்டங்களைக் கொண்டது. இவ்வேழு காண்டங்களில் முதல் ஆறுகாண்டங்களைத் துய ஆற்று நீரோட்டம் போன்றுத் தமிழ்நடை அமையும் வண்ணம் இயற்றியருளியவர் கச்சியப்ப சிவாச்சாரியார் ஆவர்.

முருகக் கடவுளின் கருணைப் பெரு வெள்ளத்தினை உலகத்தார் எளிதிற் பெற்றுய்யுமாறு வாரி வழங்குவதும், பக்திச் சுவை சொட்டச் சொட்ட அமைதியான ஆற்று நீரோட்டம் போல் அமைந்ததும், பிற்கால இலக்கியங்களில் மிகச் சிறப்புற்று விளங்குவதும் மெய்யடிகளால் நாள்தோறும் பக்தியுடன்

பாராயணம் செய்யப்பெறுவதும் ஆகியநூல் கந்த புராணமே ஆகும். முருகன், கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்களது கனவில் தோன்றி 'அன்பனே நம்மைத் தமிழில் பாடுவாயாக எனப் பணித்தருளி, திகட சக்கர என்று முதலும் எடுத்துக் கொடுத்து மறைந்தருளினர்'. (2) அதன்படியே அவர் அத்தொடக்கத்தையே முதலில் அமைத்து, இந்நூலை பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு விருத்தப் பாக்களால் பாடி முடித்தார் என்பது வரலாறு. இது முருகப் பெருமானின் திருவவதார வரலாறும், சூரபன்மன் சிவபெருமானிடம் ஆயிரத்தெட்டு அண்டங்களை, நூற்றெட்டு யுகம்வரை ஆட்சிபுரியும் பெருவரம் பெற்றுத் தேவர்களைச் சிறை செய்த வரலாறும், சண்முகக் கடவுள் சூரபன்மனுடன் போர் புரிந்து வென்று ஆண்ட வரலாறும் தேவர் சிறை நீக்கி, அவரை விணகுடி ஏற்றிய வரலாறும், முருகக்கடவுள், தெய்வயானை வள்ளியம்மை இவர்களைத் திருமணம் புரிந்தருளியவரலாறும் பற்றிக் கூறுவதாகும்.

## 1. 6 ஆசிரியர்

கந்தபுராண ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரியார், சிவவேதியர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து, காஞ்சியிலேயே இப்புராணத்தைப் பாடினார். காஞ்சியிலிருந்து முற்றுணர்ந்த பெரியோர்கள் விரும்பிய வண்ணம் இந்நூல் பாடினர் என்பதை அவரது அவையடக்கச் செய்யுளால் அறிய முடிகின்றது. அப்பாடல்கள் வருமாறு

" காஞ்சியின் முற்றுணர் மேலவர்
கந்தனெந்தை கதையினை நூன்முறை
தந்தி டென்னத் தமியன் இயம்புவேன்" ( 3)

"ஆன சொற்றமிழ் வல்ல அறிஞர்முன்
யானும் இக்கதை கூறுதற்கெண்ணுதல்" 4

இவரது தந்தை காளத்தியப்ப சிவாச்சாரியர். கச்சியப்பர் வேதம், அங்கம், சிவாகமம் முதலிய பல நூல்களைக் கற்ற புலமையாளர்.

" சிவவேதியன் காளத்தி மைந்தன் கச்சியப்பன"
வேதமொடு வேதாங்கம் பயின்று வல்லோன்"
" விரிந்த சிவாகம முணர்ந்து மேன்மை பூண்டோன"
"போத நிறை சிவமறையோன் காஞ்சி வாழும்
புனிதமிக கச்சியப்பக் குரவன்"
"வாதனுறு புலவர் குழாம் மகிழ்ந்து போற்ற குமர
கோட்டத்து கந்த புராணம் இயற்றினான்"
எனவரும் பெரியோர்வாக்காலும்

"அறுநான்கு கோட்டகத்தாரும் ஒன்றாய்க்கந்தபுராணம் பதினாயிரம் சொன்ன கச்சியப்பர் தந்தப் பல்லக்குச் சிவிகையுந் தாங்கி அச்சந்நிதிக்கே வந்து புராணம் அரங்கேற்றினார்". எனவரும் தொண்டை மண்டல சதகத்தாலும், கச்சியப்பர் பெருமை புலப்படுகின்றது. 5

## 1. 7 காலம்

இவரது காலம் ஆராயத்தக்கது. கச்சியப்பரைத் துதித்துள்ள பெரியோர்கள்,

" உபதேச காண்டம் பாடிய ஞானவரோதயர் "

"கந்தபுராணச்சருக்கம் பாடிய சம்பந்த சரணாலயர்,"

"சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் பாடிய அர்தகக்கவி வீரராகவர்,"

ஆகியோராவர் உபதேச காண்டம் பாடிய கோனேரியப்பர் கச்சியப்பரது மாணாக்கர் என்று சொல்லப்படுகின்றார். இவர் 17 ஆம் நூற்றாண்டினர் என்பர் இவர் கச்சியப்பரை "காஞ்சி வளர் கச்சியப்பர் கற்பகத்தருவை இறைஞ்சிக் கருத்துள் வைப்பாம்" எனத் துதித்துள்ளார், ஞானவரோதயர், காளமேகப்புலவர் காலத்தவர் என்று தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது, ஞானவ ரோதயர் "வயலூரில் அருள் பெற்ற எந்தை" என அருணகிரி நாதரை குறித்துள்ளார். சமாஜத்திரும்புகழின்படி அருணகிரி நாதர் திகட சக்கரம் என்பதைக் குறித்து வாதம் நிகழ்ந்ததைக் குறித்துள்ள படியால், கச்சியப்பர் காலம் காளமேகர், அருணகிரி நாதர் காலத்துக்கு முற்பட்டதாகும், அருணகிரிநாதர் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 15 ஆம் நூற்றாண்டின் முதலிலும் ஆகும். வீரசோழிய இலக்கணத்தின் காலம் கி.பி. 11ாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பர், இனி கர்ணபரம்பரைச் செய்தியாகக், கம்பரே கந்தபுராணம் பாட இருந்தார் என்றும், கச்சியப்பர் முன்னரே பாடியுள்ளார் என்பதை அறிந்து கச்சியப்பர் என்னும் சுறாவா, கந்தபுராணம் என்னும் பெருங்கடலைக் கலக்கிறது எனக்கூறி, இராமயணத்தைப்பாடத் தொடங்கினார் என்றும் கூறுவதுண்டு. இதன் படி கம்பர் காலத்துக்கு முன்பு கச்சியப்பர் காலம் என்று தெரிகின்றது, கம்பர் காலம் கி.பி. 12 ாம் நூற்றாண்டு என்பர், ஆகவே கச்சியப்பர் வீரசோழிய *காலத்துக்கும் பின்னும், கம்பர் காலத்துக்குமுன்னும், அதாவது*

கி.பி. 11ாம் நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது 12ாம் நூற்றாண்டின் துவக்கத்திலோ இருந்தார் எனக் கொள்ளலாம். என்று தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் கூறுகின்றார். 6

## 1: 8 கந்த புராணத்தின் சிறப்புகள்

சிவபிரானின் மூன்று கண்களாகக் கருதப்படும் மூன்று நூல்களுள் திருத் தொண்டர் புராணம் வலது கண்ணாகவும், திருவிளையாடல் புராணம் இடது கண்ணாகவும், இக் கந்தபுராணம் நெற்றிக் கண்ணாகவும் மதிக்கப்படுகின்றன. இவ்வாறான தெய்வத் தொடர்புடைய இப்புராணம், பக்திச் சுவை மட்டுமன்றி சிறந்த இலக்கியச் சுவையும் உடையது. இந்நூலின் நடை, மற்றப் பல நூல்களைப் போல் இங்கொரு விதம் அங்கொரு விதமாக இடந்தோறும் வேறுபட்டிராமல், எங்கும் ஒரே விதமான தன்மையினை உடையது. இதன் நடை, யாவரும் எடுத்து ஏத்தும் கம்பராமாயணத்தின் நடைக்குச் சற்றும் பின் வாங்குவதன்று. இந்நூல் போன்ற நடையழகு உடைய பெருங்காப்பியங்கள், மிகச்சிலவேயன்றிப் பல வல்ல. உவமை உருவகம், சிலேடை போன்ற அணிகளை இந்நூலில் நிரம்பக் காணலாம். மற்றும் ஒரே பொருளைத் தரும் பல சொற்களைப் பிரயோகித்தல், ஒன்றுக்கு மேற்பட்ட பொருளாகும், சொற்கள் இவைகளையும் காணலாம். மேலும் இந்நூலாசிரியர், அகத்தியர்க்குத் தமிழைச் செவியறிவுறுத்திய செந்தமிழ்ப் பரமாச்சாரியாராகிய அறுமுகக்கடவுளின் அனுக்கிரக்கத்தால் அவதரித்தவராதலாலும், அக்கடவுள் கனவிலே எழுந்தருளிக் காட்சி கொடுத்துக் கட்டளையிட்டுத்,

தமது அருமைத் திருவாக்கினால் அடியெடுத்துக் கொடுக்க இந்நூல் தொடங்கிப் பாடப்பட்டதனாலும், இதிலுள்ள பிழைகளைக் களைந்து திருத்தப்பாடு இயற்றியவர் அக்கடவுளே ஆதலாலும், இதனை அரங்கேற்றிய இடம் கடவுள் ஆலயமே ஆதலாலும், இந்நூலில் கூறிய விஷயம் அக்கடவுளின் திவ்விய சரித்திரமே ஆதலாலும், இந்நூலின் மீதெழுந்த ஆட்சேபத்துக்கு ஏற்ற விடை கூறி வாயடக்கியவர் அக்கடவுளே ஆதலாலும் இந்நூலாசிரியர் மகிமையும், இந்நூலின் பெருமையும் எவரும் எடுத்து உரைத்து முடிக்கும் . அளவுடையன அல்ல என்றும் கூறலாம்.

## 1.9. புராண வரலாறு

கடவுள் வாழ்த்து, அவையடக்கம், ஆற்றுப்படலம், திருநாட்டுப் படலம், திருநகரப்படலம் கூறியபிறகு பாயிரப்படலம் வருகிறது. இங்கே கந்தபுராணத்தின் தோற்றத்தைச் சொல்கிறார்.

பிரமதேவன் கச்சபாலயத்தில் எழுந்தருளி இருந்தான். முனிவர்கள் பலர் பிரமதேவனை அணுகி, 'நாங்கள் தவம் செய்ய வேண்டும், அதற்குரிய இடம் ஏதாவது சொல்ல வேண்டும்' என்று கேட்டார்கள். பிரமன் ஒரு தர்ப்பையைச் சக்கரம் போலச் சுற்றி ஓட விட்டார். அது போய் ஒரு காட்டில் தங்கியது. அந்த இடத்திற்குச் சென்று முனி புங்கவர்கள் தவம் செய்தார்கள். அதற்கு நைமிசாரண்யம் என்று பெயர். அவர்கள் அங்கே தவம் செய்த போது சூரபுராணிகர் வந்தார். அவர் பல புராணங்களைச் சொன்னவர், அவரை முனிவர்கள் வழிபட்டுக் கந்தபுராணத்தைச் சொல்ல வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். அப்போது முருகப்பெருமானை வணங்கிச் சூதமாமுனிவர்

கந்தபுராணத்தைச் சொல்லத் தொடங்கினார். இவ்வாறு புராண வரலாற்றைச் சொல்லி அதற்கு மேலே கந்த புராணத்தை முறையாகத் தொடங்குகின்றார், கச்சியப்ப சிவாச்சாரியார்.

## 1. 10 கந்த புராணத்தின் அமைப்பு

கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய இக்கந்தபுராணத்தில் முதலில் பாயிரம் அமைந்துள்ளது. இதில் விநாயகர் காப்பு, சுப்பிரமணியர் காப்பு, நூற்பயன், வாழ்த்து ஆகியவை உள்ளடங்கி ஐந்து பாக்களும், பிறகு கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இருபத்தைந்தும் அமைத்துள்ளார். தொடர்ந்து அவையடக்கப்பாடல்கள் இருபதும், தொடர்ந்து ஆற்றுப்படலம் முப்பத்தொன்பது பாடல்கள் கொண்டும் விளங்குகின்றன. ஆற்றுப்படலத்தைத் தொடர்ந்து திருநாட்டுப் படலம் ஐம்பத்தேழு பாடல்களையும், திருநகரப்படலம் நூற்று இருபத்து நான்கு பாடல்களையும் கொண்டு அமைகின்றது, இதனைத் தொடர்ந்து பாயிரப்படலம் அமைத்துள்ளார். இதில் எண்பத்து இரண்டு பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அமைப்பிற்கும் பிறகே காண்டங்களின் அமைப்பு வைக்கப்பட்டுள்ளது. முதல் காண்டமாகிய உற்பத்திகாண்டம், இருபத்தாறு படலங்களைக் கொண்டு அமைகின்றது. இதில் பார்வதியின் தவம், சிவன்பார்வதி திருமணம், முருகனின் திருவவதாரம், வீரவாகு முதலிய வீரர்களின் தோற்றம் முருகனின் திருவிளையாடல்கள், தாரகன் வதை, முருகன் திருச்செந்தூர் வருதல் ஆகியன கூறப்பட்டுள்ளன இரண்டாவது காண்டமான அசுரகாண்டம் நாற்பத்து மூன்று படலங்கள் கொண்டது, இதில் சூரபன்மன் முதலான அசுரர்களின் தோற்றம், சூரபன்மன் சிவனிடம் வரம்

பெற வேள்வி நடத்துதல், சிவபெருமான் அருள்புரிதல், சூரனது அரசாட்சி, இந்திரன் மகன் சயந்தன் முதலான தேவர்களைச் சிறைப்பிடித்தல், ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. மூன்றாவது காண்டமான மகேந்திர காண்டம் இருபத்தொன்று படலங்களைக் கொண்டது. இதில் வீரவாகுத்தேவர் சூரன் நகரமான மகேந்திர புரம் செல்வது, சயந்தனைக் கண்டு ஆறுதல் கூறுவது, சூரனின் அரச சபைக்குப் போவது, சதமுகன், வச்சிரவாகு, யாளிமுகன் ஆகியோரை வதைப்பது ஆகியவை கூறப்பட்டுள்ளன. நான்காவது காண்டமான யுத்த காண்டம் பதினாறு படலங்களைக் கொண்டது. இதில் அக்கினிமுகாசுரன், தருமகோபன், பானுகோபன் ஆகியோர் வதைக்கப்பட்டதும், சூரபன்மன், சிங்கமுகாசுரன் ஆகியோரை முருகன் வதைத்தும் கூறப்பட்டுள்ளது. அசுரர்குலம் அழிக்கப் பட்டமையும் தேவர்கள் மீட்கப்பட்டமையும் கூறப்பட்டுள்ளன. ஐந்தாவது காண்டமான தேவகாண்டத்தில் ஐந்து படலங்கள் உள்ளன. அசுரர்களை வதம் செய்தபின்னர், முருகன் திருப்பரங்குன்றத்தில் சென்று இருத்தலும், இந்திரன் மகள் தெய்வயானையைத் திருமணம் செய்தலும் இந்திரன் முடிசூடுவதும் விளக்கப்பட்டுள்ளன. ஆறாவது காண்டமான தக்க காண்டம் இருபத்துநான்கு படலங்கள் கொண்டு விளங்குகின்றது. இந்திரன் மகன் சயந்தன், தங்கள்குரு பிரகஸ்பதியிடம் "சிவபெருமானை அழைக்காமல் தக்கன் செய்த வேள்விக்கு மற்றைய தேவர்கள் சென்று அங்கு அளிக்கப்பட்ட அவியை அத்தேவர்கள் நுகர்ந்ததால், சூரபன்மனால் இத்தகைய துன்பத்தை அடைந்தார்கள் என்று சொல்கிறார்களே, அவ்வரலாறு யாது?" எனக்கேட்கிறான். அப்போது பிரகஸ்பதி அந்த வரலாற்றைக் கூறுகிறார். அந்தப் பகுதியும் அதனோடு தொடர்புடைய செய்திகளும் தனியாக 'தக்க காண்டம்' என்ற

பெயருடன் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் சிவபெருமானின் பெருமைகள், வீரச்செயல்கள், திருவிளையாடல்கள் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தொடர்ந்து முருகன் வள்ளியம்மையைத் திருமணம் செய்து கொண்ட நிகழ்ச்சியும் அமைக்கப்பட்டுள்ளது.

முருகன் திருவவதாரம் செய்தது சூரவதத்திற்காக என்பது எல்லோரும் அறிந்த செய்தி. ஆனால் கந்தபுராணம் சூரவதத்துடன் முடியவில்லை. அதன் நிறைவுப் பகுதியாக வள்ளி திருமணம் அமைந்துள்ளது. சூரவதம் என்பது துன்பத்தை நீக்கும் செயல். வள்ளி திருமணந்தான் இன்ப ஆக்கத்தைச் சொல்வது.

## 1. 11 முடிவுரை

இவ்வாறு முருகக் கடவுளின் அருட்திறங்களையெல்லாம் அழகுற எடுத்து விரித்துரைக்கும், தமிழ்ப்பெருங்காப்பியமாகிய கந்தபுராணம், புராணங்களுள் தலைசிறந்தது. இப்புராணத்தின் இலக்கியக் கூறுகளையும், அணிநயங்களையும், இதில் காணப்படுகின்ற அறக்கருத்துக்களையும், முருகன், சிவபெருமான், பார்வதி ஆகியோரது பெருமைமிகு பண்பு நலன்களையும் எதிர்நிலைப் பாத்திரங்களான சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகியோரது பண்புகளையும் இனி வரும் இயலில் காண்போம்.

# அடிக்குறிப்புகள்

1. இளம்பூரணர் உரை - தொல்காப்பியம் - பொருளதிகாரம் -
   நூற்பா - 538
2. சிங்காரவேலு முதலியார் - அபிதான சிந்தாமணி -
   1988 - பக் 1169
3. கந்தபுராணம் முதற்பகுதி - திருப்பனந்தாள் ஸ்ரீ
   காசிமடத்து வெளியீடு - 1952 பக் 8
4. மேலது பக் 8
5. மேலது பக் 9
6. மேலது பக் 10